பொய்யாமொழி



ஆசிரியர்—ம. பாஸ்கரனர்.

OFFICE OF ... BOOKS 18 NOV 1950 MADRAS

செய்யா மொழிக்குந்திருவள் ளுவர்மொழிந்த
'பொய்யாமொழி'க்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

கதிர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1981, ஐப்பசி 9 (25—10—50) புதன்கிழமை. | மணி 9

545
4.50.

சங்கு.

சேத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலாமென்றே எண்ணி யிருப்பார்
பித்த மனிதரவர் சோலுஞ் சாத்திரம்
பேயுரை யாமேன்றிங் கூதேடா சங்கம் 1.

இத்தரை மீதினி லேயிந்த நாளினில்
இப்போழு தேமுக்தி சேர்ந்திட நாடிச்
சுத்த அறிவு நிலேயிற் களிப்பவர்
தூயவ ராமேன்றிங் கூதேடா சங்கம். 2.

போய்யுறு மாயையைப் போய்யேனக் கோண்டு
புலன்களை வேட்டிப் புறத்தி லேறிந்தே
ஐயுற லின்றிக் களித்திருப் பாரவர்
ஆரிய ராமேன்றிங் கூதேடா சங்கம். 3.

மையுறு வாள்விழி யாரையும் போன்னேயும்
மண்ணேனக் கோண்டு மயக்கற்றிருந்தாரே
சேய்யுறு காரியம் தாமன்றிச் சேய்வார்
சித்தர்களா மேன்றிங் கூதேடா சங்கம். 4.

—மகாகவி பாரதியார்.

வார இதழ். ★ விலை அணு 1

வாழ்த்துச்செய்திகள்

—:—

V.R. ராஜகோபாலன்,
உடையார்பாளையம். 12 - 10—50

ஆசிரியர் அவர்கட்கு

வணக்கம் தங்கள் 'பொய்யாமொழி' யைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. பெயருக்கு ஏற்றாற் போன்று குறைகளைப்பற்றிய கதை, கட்டுரைகள் வருமென எதிர்பார்க்கிறோம்,

ஃ ஃ ஃ

K. G. சுந்தரராஜு

துணைத்தலைவர் ஷெட்யூல் காஸ்ட் பெடரேஷன் உள்கோட்டை.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு

தங்களின் பொய்யாமொழி தலை இதழ் கண்டு மகிழ்ச்சி. சாந்திதனைப் போதித்த காந்தியடிகளாரின் போதனையைப் பின்பற்றியும், இந்திய சட்டசபையில் சட்டமந்திரியான டாக்டர். அம்பேத்காரின் போதனைப் படியும் நடந்துவரும் எங்கட்கு தங்கள் இதழ் வழிகாட்டியாக விளங்கும் என நம்புகிறோம்.

முன்னேற்ற கழகம், மற்ற கழகத்தவரும் விஜயம் செய்து 29—9—50ல் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்கள் குறித்து சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்க தங்கள் பத்திரிகை ஆவன செய்யும் என நம்புகிறேன். வாழ்க பொய்யாமொழி!

சீர்திருத்தப் போர்வையில் கள்ளமார்க்கட்..!!

"எம்டன்' "திரன்" "கலைநேசன்"

போன்ற பத்திரிகைகளின் போக்குகள்

திருந்துமா ..? :: :: :: நீடிக்குமா ..!

(ஒற்றன்)

★

தமிழ் நாட்டில் பத்திரிகை உலகில் ஓர் புரட்சி..! மாறுதல்...!! சினிமாத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர், நடிக, நடிகைகளைத் தாக்கி எழுதும் பத்திரிகைகளிலே மோகம்...!!!

'திரன்' 'எம்டன்' 'கலைநேசன்'...! போன்ற பல பெயர்தாங்கிய சஞ்சிகைகள் தோன்றி கலைவளர்த்த தமிழ் நாட்டை களங்கப்படுத்தி வருகின்றன.

இன்றைய நாகரீகத்தில் சினிமா ஒரு கலையாக மதிக்கப்படுகிறது. இக்கலையின் மூலம் நாட்டு மக்களிடையே சமூக சீர்திருத்தங்கள், விஞ்ஞானம், முதியோர் கல்வி போன்ற சமூக சேவைகளை நன்கு பரப்பமுடியும், பாமர மக்களை சீர்திருத்தவும் முடியும்

இந்த தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை நடிகர், நடிகையர்களைக் குறித்து அவதூறாக எழுதுவது கலைக்கு துரோகம் செய்வதாகவே ஆகும்.

எழுதட்டும்...! ஆனால் எதற்கும் வரையறை உண்டு நடிப்பைப்பற்றி எழுதட்டும்...! அதைவிட்டு அவர்களின் அந்தரங்க நடவடிக்கைகளை ஆபாச முறையிலே எழுதுவது, பிரசுரிப்பது மிகவும் தவறு; கண்டிக்கத்தக்கது. இது விபசாரத்தை தடுக்கும் முறை என்று அவர்கள் கருத்தெனில் அது அவர்களின் பிற்போக்கு தன்மையே காரணம்.

இவர்கள் எழுதுவதும் தனியான முறை. இவர்களின் கோரிக்கைகளை மறுக்கும் நடிக—நடிகைகளைக் குறித்து மிகவும் கேவலமான, அருவருப்பான நடையில் எழுதி தொடரும் என்று எழுதுவது. உடனே தரகர் வியாபாரம்..! ...?... கைமாறல்...!!! உடனே அடுத்து வேறோர் இடத்தில் வலைவீச்சு!

இப்படியே இவர்களின் கள்ளமார்க்கட் வியாபாரங்கள் நடந்துவருகின்றன! இவை நீடிக்குமா?

உலகிலேயே கலை வளர்த்தவர்கள் தமிழர்கள்...! எல்லாக் கலைகளையும் காலத்திற்கேற்ற, மாற்றி, புது மெருகிட்டு வளர்த்தவர் தமிழர்கள்!! கலைத்தொழிலில் ஈடுபட்ட கலைஞர்களுக்கு எல்லையில்லாதுவழங்கி வணங்கி மாண்புற்றவர் தமிழர்கள்! அத்தகையோர் வதியும் நாட்லேதான் இந்த ஆபாச கலைவளர்க்கும் பத்திரிகைகளும் உலவுகின்றன!

வகுப்புத் துவேஷமென பத்திரிகைகளை மூடக்கும் சர்க்காரும் இந்த ஆபாச சஞ்சிகைகளுக்கு இடம் கொடுத்து வருவது தவறு.

ஆகவே, இப்பத்திரிகைகள் இனியாவது திருந்துமா? இல்லையெனில் இவர்களின் "குட்டுகள்" மக்கள் மன்றம் ஏறும் நாள் வெகு தூரமில்லை......!

– காமமும்.

"வீயாரார்"

★

மது! மங்கை! அவைகளை அனுபவிக்கத் தெரிந்தவர்கள் அவைகளிடம் அடிமையாகிறார்கள். உண்மை.

மது. மன்னர்களின் பரம்பரையைமட்டுமல்ல, வல்லரசுகளின் வாழ்வையே அழித்துவிட்டிருக்கிறது. மது, ஒரு நஞ்சு! உடலை துன்புறுத்தும். மூளையைக்கெடுக்கும். வாழ்க்கையைச் சிதைக்கும். எனவே மக்களிடம் மது தடைப்படுத்தப்பட்டது.

கள் உண்டவர்கள் பட்டபாட்டை நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். அந்தக்காட்சி இன்னும் நமது கண்களை விட்டு அகலவில்லை.

கள்ளைவிட காமம் எந்தவிதத்திலும் குறைவுப்பட்டதில்லை. கள்ளை கண்களால் காணும்போது அது மகிழ்ச்சியைத் தருவதில்லை. உண்டபின்னர், ஒருவித மன மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆனால் காமம் அப்படியல்ல காதலர்கள் தங்களது காமத்தைப்பற்றி எண்ணும்போதே மகிழ்ச்சிக்கொள்ளுகின்றனர். அதை வள்ளுவர் கூறுகிறார்

"உண்டார்கண் அல்ல தடுநருக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று" என்று.

களிக்குந்தோறும் ஒருவன் கள் உண்ணுவதைப் போல் காமம் வெளிப்படுந்தோறும் காதலர்களை இன்பம் பற்றிக்கொள்கிறது.

"களிக்குந்தோறும் கள்உண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படுந்தோறும் இனிது".

நினைத்த நேரத்தில் களிப்பையும், கண்ட அளவில் மகிழ்ச்சியையும் தரும் தன்மை கள்ளுக்கு இல்லை; காமத்திற்கு உண்டு. எனவே நினைத்தாலும் நீங்காதகளிப்பைத் தருதலால் காமம் கள்ளைப்பார்க்கிலும் இனிது. இதை வலியுறுத்துகிறார் வள்ளுவர்,

"உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில்; காமத்திற்கு உண்டு"

"உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது"

என்ற தனது இரண்டு குறட்பாட்டுகள் மூலமும்.

வள்ளுவர் கள்ளையும் காமத்தையும் பற்றி மேற்காட்டிய நான்கு இடங்களில் கூறுகிறார் அவரது கருத்து கள்ளைவிட காமம் சிறந்திருக்கிறது என்பது. (காமம் என்ற சொல்லைக் காதல் என்ற பொருளிலேயே கொண்டிருக்கிறார். காதல் – தன்னலமற்ற ஒரு தன்மை)

கள், ஒரு கட்டுப்பாட்டில் இருக்கும்போது மக்களை வதைப்பது கிடையாது. அதேபோல காமமும் ஒரு தனி நிலையில் இருக்கவேண்டும். கள்ளை நாட்டில் தாராளமாக உலாவ விட்டால் எத்தனை துன்பம் ஏற்பட்டது? எவ்வளவோ சீர்கேடுகள் மக்களினத்தில். கொலை, கொள்ளை, ஒழுங்கீனம் ஆகியதோன்றின. காமத்தையும் இப்போது இன, மத, சாதி, அடிப்படைகளின்பேரில் நாட்டில் உலவ விட்டிருக்கிறோம். அதனால் சமூகத்தில் ஏற்படும் அழிவுகள் ஏராளம். இன்றைய இளைஞர் உலகம் அதை மறக்க முடியாது. எத்தனையோ குடும்பங்களில் பிளவு, விபசாரம், தற்கொலை, மூளைக்கேடு இன்னபிற இழிவுகள் நம்மைக் கௌவிக் கொண்டன. இந்நிலை மாறவேண்டாமா? கள்ளை ஒரு கட்டுப்பாட்டில் நிறுத்தியதுபோல் காமத்தை நாடு, இனம், சாதி பிற வேறுபாடுகள் இல்லாத ஓர் அடிப்படையின்மீது மக்களிடையே நிலவச் செய்தால் எத்தனையோ நன்மைகளை நாம் எய்த முடியும். மக்கள் முன்னேற்றம் அதைப் பொருத்து வளரும் என்பதில் தடை ஏற்படாது. சுருக்கமாகக் கூறினால் கலப்பு மணம் தேவை.

அந்நிலை, கள்ளை சட்டமியற்றி ஒழித்ததுபோல் செய்தால் ஏற்பட்டுவிடாது. ஆட்சியாளரால் செய்ய முடியாது. அவர்கள் சட்டம் இயற்றியிருக்கலாம். அவ்வளவுதான் அவர்களால் முடியும். ஆனால் மக்களின் மனதிலே மாற்றம்வேண்டும். அந்நிலை ஏற்பட அறிஞர்கள் முழு முயற்சி செய்யவேண்டும். அறிவு வளர்ப்பது மட்டுமில்லை அறிஞர்களின் வேலை. அறிவுமட்டும் வளர வளர ஆபத்தும் தொடர்ந்துக்கொண்டே இருக்கும். அதை நாம் நேரிலே கண்டு வருகிறோம். ஆகையால் பண்பாடும், அறிவும் சமநிலையில் எப்போதும் வளர, பாடுபடவேண்டும். அவ்வாறு செய்யின் கள்ளின் தொல்லை ஒழிந்ததுபோல காமத்தின் குறைபாடும் நிவர்த்தி செய்யப்படும்.

அம்பிக்கு – அண்ணா.

"வீயாரார்"

★

அம்பி! இன்றைக்கு உனக்கு ஒரு கதை சொல்லப்போகிறேன். கவனமாய்க் கேட்கவேண்டும்.

நேற்று திருவள்ளுவர் என்ற தமிழ்ப் பெரியாரைப் பற்றிச்சொன்னேன் அல்லவா? அவர் தனது திருக்குறளிலே, எல்லோரிடமும் அடக்கம் தேவை என்று சொல்லியிருக்கிறார் அம்பி. பெரியவர்கள் சொல்லுகிற புத்திமதியைக்கேட்டு அடங்கி நடக்கவேண்டும். இல்லையென்றால் மற்றவர்கள் உன்னைத் துஷ்டப்பயல் முரடன் என்று சொல்லுவார்கள். பிறகு உன்னை அவர்கள் மதிக்கமாட்டார்கள். இதோபார் அந்தக்குறள் "அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை, ஆரிருள்உய்த்துவிடும்" அடக்கம் – பெரியவர்கள் கூறும் நன் மொழிகளுக்கு அடங்குதல், அமரருள் உய்க்கும் – அறிஞர்களிடம் செலுத்தும்; அடங்காமை – பெரியவர்கள் கூறும் நன்

தொடர்ச்சி 7-ம் பக்கம்

பொய்யாமொழி
ஆசிரியர்: ம. பாஸ்கரனர்

கதிர் 1 } 1981, ஐப்பசி 9 புதன். { மணி 9

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

எண்ணம், சொல், செயல் மூலம் எண் குணங்களையுங்கொண்ட தலைவனைப்பின்பற்றுவிடில் புலன்கள் ஐந்துமிருந்தும் பழுதடைந்து பயனில்லாமையை ஒக்கும்.

எண்குணங்களாவன :-

தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களிவின்று நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை.

தேர்வு முறையும் - தொழில் நலனும்.

★

நம் நாட்டில் அண்மையில் அரசியலார் தேர்தலுக்காக ஒரு விஸ்திர்ண மக்கள் எண்ணிக்கையை கொண்டு அந்தந்த நிலப்பரப்பை அடிப்படையாக வைத்து சட்டசபைகளில் கீழ்சபை மேல்சபைகளுக்கு மெம்பர்கள் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஷை முறை இந்நாட்டுக்குகந்ததாகயில்லை. ஏன் ஒருநாட்டுக்கு முதன்மை பெற்ற பலவித தொழிலாளிகளும், விவசாயத்துறையின் நேர் உழைப்பு தொழிலாளர்களும் பலவித நெசவுத்தொழில், இயந்திரத் தொழில், ரயில்வேதொழில் மில்தொழிலாளர்கள் சமுதாயத்தொழிலாளர்கள் பல லக்ஷக்கணக்கான ஒரே விஸ்திரணத்திலேயே இருக்கிறார்கள். தேர்தலில் சென்று சட்டமியற்றுபவர்கள் அந்தத் தொழில் துறையிலும் அனுபவம் வாய்ந்தவர்கள், தொழில் நுணுக்கம் புரிந்தவர்கள் சட்டமியற்ற முற்பட்டால்தான் தொழில் வளம் பெருகி, நாட்டில் விளைபொருள்களும், ஏனைய கைத் தொழில்களும் வளரும்.

உதாரணமாக, 1950 ஆண்டு செப்டம்பர்மீ நூல் கோட்டா பிரித்து தறிகாரர்களுக்கு கொடுத்தானது ஒரு ம[cut off] துண்டுக்கோ, ஊடைக்குகூட ஆகா[cut off] 8 சிலுப்பையுமாம். ஓரளவு பூ நு[cut off]டுக் கொள்ள உதவுமேயொழிய தரிக்கு நெய்வதற்கு ஒவ்வொருவர் நூலும் தனித்தனியே உதவாது. B. M.-வ் விற்று பலர் நூல் சேர்த்தால் ஒரு சேலைக்காகும்.

இன்றைய முறைப்படி பணம் படைத்தவர்களே தேர்தலில்கலந்துகொள்ளக்கூடும். M. L. A. போன்ற கீழ் சபைகளுக்கு நிற்க பணமும் படையும் வேண்டும். M. L. C. என்றால் பணம் படையுடன் 50 ரூபாய் செலுத்தும் மேல் அந்தஸ்து பெற்றவர்கள் நிற்கவும் அவர்களை ஆதரித்து ஓட்டுசெய்யவும் ஷை ரூபாய் 50-க்கு குறையாமல் செலுத்துபவர்களே ஓட்செய்யவேண்டும். கீழ் சபையில் செய்யப்படும் சட்டங்களை மேல் சபையில் தங்கள் சுகபோகத்திற்கு இடையூறன்னியில் கொண்டுவரும் சட்டத்தைதான் மேல் சபை நிறைவேற்றப்படும் இவ்வளவு சிக்கலில் எப்படி 100-க்கு 90 பேருக்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளியும், வேறு தொழிலாளிகளும் வறுமையில் வாழ்க்கை வசதி குன்றியவர்கள் எப்படிசட்டம்வகுக்க சட்டசபைக்குவரமுடியும். அவர்களுக்கு சட்டசபைக்கு வர வாய்ப்பறற போது ஏழைக்குபரிந்துபேச சட்டத்தை ஏழைத் தொழிலாளிகள் நலனுக்கேற்ப எப்படி கொண்டு வரமுடியும். இவர்களுக்கு பரிந்துபேச யார் இருக்கிறார்கள் எப்படி இருக்கமுடியும். அவரவர்களும் தங்கள் தங்களின் நிலைக்கேற்றவாறு தங்கள் மேநிலை எய்தவேண்டியதற்கு தங்களுக்குள்ள தடங்கலை எடுத்து யானையை படுக்க வைத்து குதிரை மட்டமாக நிற்கவைத்து தங்கள் நிலைக்கு சமமாக்கிக்கொள்ள எண்ணுவார்களேயொழிய வேறென்ன. பணத்தையும் பணக்காரத் தன்மையையும் பாதுகாக்க சட்டம் வசதி வாய்ப்பு ஏற்படுத்தும் முறையில் தேர்வு முறைத்திட்டம் ஏற்பட்டுள்ளதேயொழிய ஏழைகளின் வேலையில்லா திண்டாட்டமும் உடைய கொடுமைப்படுத்திவரும் ஆண்டான் அடிமை முறைபோக எண்ணுவார்களா? எண்ணியதுண்டா?

காடுகளை நல்ல கழனியாக்கி உழவுதொழில் புரிந்தும் நமக்கு வேண்டிய பண்டங்கள் அனைத்தும் உற்பத்தி செய்து கஷ்ட படுபவர்களுக்கு உங்கள் சட்டசபையில் அவர்களின் உரிமையை எடுத்து கஷ்டப்படுபவன் நேரில்

...ாதல்? காதலுக்கு ...ால், கஷ்டபடுபவனுக்கு, கஷ்டப் ப... மேநிலையெய்த வழிகாட்டி மேன்மை படுத்த இயலுமா?

மொந்தையிற் கஞ்சியை பலர் மொய்த்துக் குடித்து பசித்துக்கிடக்கும் மக்கள் தங்க வீடுமில்லாமல் சிந்தை மெலிந்தவர்களுக்கு உரிமை கேட்க ஆள் உண்டா? உரிமை சுதந்திர தேர்வினிலே 1937-ல் கடன் மசோதா கொண்டுவந்த நாளில் இந்நாட்டுத் தொழிலாளர்களுக்கு அச்சட்டம் செல்லாதென இயற்றப்பட்டதே ஏன் தொழிலாளர்களுக்கு உரிமை சட்டசபைதனில் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் இல்லாததாலல்லவா? விவசாயி முதுகெலும்பென்றால் விவசாய உழைப்புத் தொழிலும் ஏனைய பல தொழிலாளர்களும் முக்கிய எலும்பல்லவா? உடலில் முக்கியமாக தலைப்பகுதி முகமல்லவா?

இந்நாட்டில் தொழிலாளர்கள் என்றால் இன்று (S. I. R.) தென்னிந்திய ரயில்வே தொழிலாளிகளுக்கும் மில் தொழிலாளிகளுக்குமட்டும் மாகாணம் முற்றிலும் ஏற்கனவே இரண்டு ஸ்தானங்கள் மட்டும் கொடுத்திருந்தீர்களேயொழிய அதுகூட தற்போது இல்லையே முக்கியம்வாய்ந்த இரண்டில், ஒன்று உணவு மற்றொன்று உடை. உணவை உண்டுபண்ணும் உழைப்பாளிக்கும் சட்டசபையில் ஸ்தானங்கள் ஒதுக்கப்படவில்லை. உடை தயாரிக்கும் நெசவாளர்களுக்கும் ஒதுக்கப்படவில்லை போக்குவரத்து வகதிக்குரிய மோட்டார் போன்ற யந்திர சாதனங்களை இயக்கும் தொழிலாளர்களுக்கும் லக்ஷக்கணக்கான சர்க்கார் குமாஸ்தாக்களுக்கும் ஆசிரியர்கள் போன்றவர்களுக்கும் இடங்கள் ஒதுக்கப்படவில்லை. விகிதாசாரம் நாட்டில் தொழில் துறைகளில், விவசாயத்தில் உண்மை உழைப்பாளிகளுக்கும் ஒவ்வொரு வகை தொழில்களுக்கு ஸ்தானம் பிரித்துவிடாமல்

"இதனை இதனாலிவன் முடிக்குமென்றாய்ந்
ததனை யவன்கண் விடல்"

என்றபடி இல்லாமல் உதாரணமாக உடைதயாரிக்கும் தொழிலாளர்களின் தொகுதிக்காக அவர்களின் தொழில் தெரிந்த பிரதிநிதிகள் சட்ட உறுப்பினர்கள் விகிதாசாரமிருந்தால் அந்த தொழிலை பாதுகாக்க அவர்களுக்கு நன்குதெரியும்.

அதேபோல் மற்றைய லக்ஷக்கணக்கான தொழிலாளர்களைக் கொண்ட ஒவ்வொரு தொழில்களுக்கும் காப்பாப்பாற்றி வளர்க்கும் திறமையுடையவர்களில்லாத காரணத்தால் ஆட்சியாளர்கள் திறமையான காரியத்தை சாதிக்க வாய்ப்பில்லாமல் காண்பது எல்லாம் தொழிலாளர்களின் உழைப்பு கைத்திறமையின் பிரதிபிம்பம் அவர்கள் காண்பதோ வறுமை தொழில் நுட்பம் அனுபவம், திறமையில்லாதவர்களும் என்றும் ஆண்டான் அடிமையிருக்க சாஸ்வதமாய் ஏற்படுத்தும் எண்ணத்தை உள்ளத்தில் கொண்டவர்களும் தனக்கு மிஞ்சினால் தானதர்மம் எனப்பழகிய சுயநலமிகள் கொண்டு சட்டம் செய்யும்படி செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் அரசியலமைப்பு ஷரத்துகளின் கருத்துரை 4-வது பகுதி 43-வது உட்பிரிவில் விவசாயத் தொழிலாளர், ஆலைத்தொழிலாளர், இதர தொழிலாளர் முதலிய சகல தொழிலாளருக்கும் வேலை கிடைக்கவும் ஜீவனோபாயத்திற்கு (பயத்திற்கு) போதிய ஊதியம் கிடைக்கவும் கண்ணியமான வாழ்க்கைத்தரத்திற்கு ஏற்ற வேலைச் சூழ்நிலையும் ஓய்வும் சமூக வசதிகளும் கலாச்சார வசதிகளும் கிடைக்கவும் அரசாங்கம் முயற்சிக்கவேண்டும் குறிப்பாக கிராமாந்திரப்பகுதிகளில் தனி நபர் அடிப்படையிலும் கூட்டுறவு அடிப்படையிலும் குடிசைத் தொழில்களை வளர்க்க அரசாங்கம் முயலவேண்டும். இக்காரியங்களுக்காகச் சட்டமியற்றுவதின்மூலமோ பொருளாதார ஸ்தாபனங்களை அமைப்பதன்மூலமோ வேறு வழிகளிலோ அரசாங்கம் முயலலாம்

இது குடியரசு உரிமைச்சட்டம் செய்யப்பட்டுள்ளது ஆனால் (3-வதுபகுதி 14 உட்பிரிவில் சட்டத்தின் எல்லாப் பிரஜைகளும் சமம்) எனக்கூறுகிறது உண்மையானால் தேர்வில் (எலக்ஷனில்) 4-வது பகுதி 43 பிரிவில் விவரித்துள்ளபடி சகலதொழிலாளர்களுக்கும் ஜீவ(ன)னோபாயத்திற்கு வேண்டிய போதிய வசதி யளிப்பதினின்றும் ஏனைய தொழிலாளர்கள் சட்டசபையை எட்டிப்பார்க்கக்கூட முடியாது சட்டசபை தேர்வினிலே செல்வாக்குள்ள பணக்காரர்கள் எடுக்கப்படும்படியாகவே எலக்ஷன் முறை வகுத்திருப்பதும் பணச்செலவு அதிகமாகும்படி முறைவகுத்துள்ளது தெரிந்ததேதான். 4-வது பகுதி 43 பிரிவு செய்து வைக்கப்பட்டிருக்கிறது.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
வீணில் உண்டுகளித் திருப்போரை நிந்தனைசெய்வோம்"

என்று உரை உண்மையானால் நெருப்பிலே குளிர்ச்சியும், தண்ணீரில் உஷ்ணத்தையும், துடைத்துவிட்ட ஈரமில்லா பணம்படைத்த நெஞ்சத்தாரிடம் நேர்மையையும் ஆடுகளின் காவலுக்கு நரியையும் வைத்தல்போலவும் வள்ளுவர் கூறியபடி கள்ளினும் கொடியது காமம் ஆனால் அதனினும் கொடியது உண்டெனில்

'கொலைமேற் கொண்டாரிற் கொடியதே யலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து'

என்பதற் கொப்பானவர்களிடமா வறுமையிலுழன்று வாட்டமுற்று எலும்பும், தோலுமாய் நின்றுவாடும் எலும்புக்கூட்டுருவங்களை ஒப்படைக்க எண்ணுவது இந்நாட்டுக்கு வகுக்கும் தேர்வுமுறையில் 100-க்கு 90-க்கு மேற்பட்ட ஏழை தொழிலாளர்கள் சட்டசபையில் போட்டிபோட அன்றட வாழ்க்கையில் அவதியுறும் மக்களால் முடியாதுஎனத்தெரிந்தவர்கள் ஒவ்வொருதொழில் பிரிவுக்கும் விகிதாசாரம் பிரித்து அவர்களுக்கு தனித் தொகுதி யமைத்திருக்கவேண்டாமா? ஏன்? செய்ய மனமில்லை. பாமரர்களுக்கும் பட்டாளிகளுக்கும் பாடுபடுவதாய் சொல்லி பறைசாற்றிவாங்கிய இந்நாட்டுச் சுதந்திரம் ஒரு சிலர் உண்டுகொழுத்து உல்லாசபுரியில் வாழ்வதற்குத்தானா? எண்ணிப்பாருங்கள் சிந்தித்து வரப்போகும் தேர்வுக்குள் ஒவ்வொரு தொழில் பிரிவினருக்கும் விகிதாசாரமாய் சட்டசபையில் இடமளியுங்கள். அதுதான் சத்தியம், அன்பு நேர்மை. உத்தமர் காந்தியடிகளின் உள்ளக்கிடக்கை என்பதை உணருங்கள்.

பசுத்தோல்போர்த்திய புலியுள்ளம் கொள்ளவேண்டாம். வருங்காலம் பழிக்கும் நினைவில்வைத்து நடவுங்கள் இந்த வள்ளுவர் அமைச்சு முறையை அறிந்து நடவுங்கள்.

செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல்.

இ—ள்: அவ்வப்போது நடக்கும் உலக நடைக்கேற்ற வாறு செயலாற்றுவதே நூலறிவின் பயனாகும். மக்கள் மிகுந்த ஏழ்மையால் வாடுவதால் மாற்றியமையுங்கள். தேர்வு முறையை மேலும் இன்று வகுக்கப்பட்டுள்ள அரசியல் நிர்ணய சட்டமானது, இந்நாட்டில் வெள்ளையர்கள் ஆண்டகாலத்தில் அந்த சுதந்திரமற்ற குடியரசில் 1946-ல் ஏற்பட்ட சட்டசபை மெம்பர்களைக்கொண்டு பொறுக்கியெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணயசபை மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதாகும். பின்னர் சர்வஜன ஓட்டுரிமை கொண்டதல்லாதோடு போட்டியிட்ட சில இடங்களிலும்கூட அன்றை ஓட்டர் ஜாபிதாப்படி 20-ல் ஒருபகுதியினர்கள்கூட ஓட்டளித்து அனுப்பாதது மாகும் அந்த ஒரு சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசியல் நிர்ணயசபை சட்டமும் நியாயப்படியும் சட்டப்படியும், தர்மப்படியும் செல்லத்தக்கதல்ல

சர்வஜன ஓட்டுரிமை மூலமும் நாட்டிலுள்ள நானாவித தொழில்களும் விவசாயிகளும், நிலச்சுவான்களும், போன்றவர்களைப் பிரதிநிதியாகக்கொண்டு நம் நாட்டு நிலைக்கேற்ப பெருவாரியான மக்களின் விருப்பத்தின்படி ஓட்டுரிமைவாங்கி சட்டமூலம் பிறப்புரிமை போன்றவைகளை வகுப்பதே ஜனநாயகம் என்ற தன்மையை ஒத்ததாகுமேயொழிய மக்களுக்கு நன்மையளிக்குமேதவிர இந்த அரசியல் நிர்ணயசபை சட்டம் என்பது நியாயத்தின்பாற்பட்டதாகாது. அன்று நாம் பாமரர்களிடம் பாட்டாளிகளிடம் ஆசிரியர்களிடம் கிராம உத்தியோகஸ்தர்களிடம் சர்க்கார் அலுவலகக்காரரிடம் ஆலைத்தொழிலாளரிடம் மோட்டார் தொழிலாளியிடம் இயந்திரத் தொழிலாளியிடம் கைத்தறி தொழிலாளியிடம் சமுதாயத் தொழிலாளியிடம் என்னகூறினோம் நாடு அடிமைப்பட்டுகிடக்கிறது. நம்பேரில் வெள்ளையன் ஏறி சவாரி செய்கிறான் என்று சொல்லி காங்கிரஸில் சேருங்கள் காங்கிரசைப் பலப்பலத்துங்கள் பாரத நாட்டை மீட்டு ஆண்டான் அடிமையின்றி வாழுவோம் என்றோமே வெள்ளையன் சம்பளத்தையும் அவன் நாட்டின் வருவாயையும் நம்மவன் சம்பளத்தையும் நம்மவர்களின் வருமானத்தையும் ஒப்பிட்டுக் காட்டினோமே இன்று நம் மறந்தை இந்நாட்டு நடுநிலைமையாளர்களையும் உழைப்பாளி பாமரமக்களையும் உயர்த்த அவரவர்களின் விகிதாசார பங்கை அவரவர்களிடம் அளிக்காமலிருப்பது அறமா சிந்தியுங்கள்.

தங்கள் தங்கள் கோரிக்கை சம்பந்தமுள்ள இடர்பட்டவர்கள் சொல்வது செய்வதுபோல் அவர்களைக் கொண்டு ஊதியமடைபவர்கள் செய்ய இயலுமா? அவர்களை அரசியலில் கலக்க தடைசெய்யலாமா? என்பதை எண்ணுங்கள்.

அன்பர்களே! விகிதா[illegible] ஜனநாயகத்திற்கு மதிப்பளியுங்க[illegible]

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை [illegible]
வைத்தூறு போலக் கெடும்" [illegible]றள்.

இ—ள்; வருமுன்னர்க்காவாதான் வாழ்க்கை — குற்றம் வருமுன்னே அதைக்காவாதவனதுவாழ்க்கையானது எரிமுன்னர் வைத்தூறுபோலக்கெடும்—நெருப்பின் முன்னுள்ள வைக்கோல் போரைப்போல் அழியும்.

சிந்தியுங்கள், நியாயம் வழங்கும் சட்டகர்த்தாக்களே மன்றோரஞ் சொல்லுதலும் செய்தலும் தகாது.

உதாரணமாக இன்றுள்ள நூல் வினியோகமானது P. T. C. பாகாண டெக்ஸ்டைல் ஆபீசர் கண்ட்ரோல் சாமான்களைப் பூராவும் ஜில்லாவாரியாக பங்குவிதம் செய்கிறார் எனில் ஜில்லாவாரியாக உள்ள 10 X 40 வரை உரப்புநூல் Low Count's எத்தனை கைத்தறிகள் மெல்லியரக 60முதல் 100 X 120 கைத்தறிகள் எவ்வளவு என்று ஜில்லா கணக்குகளைக்கொண்டு நூலை அந்தந்த ஜில்லாவுக்கு வேண்டிய நூல்களைப் பிரித்தால் ஒரு இடத்தில் 1½பவுண்டு பூநாலுக்கு உபயோகிக்கும்படியும் மற்றொரிடத்தில் கொஞ்சம் அதிகமும் முதலாளிகளுக்காக அளித்துள்ள சலுகையில் மில்காரர்களின் கண்ட்ரோலை பம்பாய்கமிஷனரிடம்விட்டு மில்காரர்களின் விருப்பப்படி 12½பர்சண்ட் அவர்களிஷ்டப்படி விற்கக்கொடுத்து B.M. உண்டுபண்ணுவதுயார்? தொழிலில் அனுபமில்லாத காரணத்தால் கைத்தறிகாரர்களின் சின்டை மாஸ்டர் வீவர்கையில் ஒப்பித்தமாதிரி 1½ X 2 பவுண்டு நூல்வரும் பங்கை கைத்தறி நெசவு நெய்பவன் திருச்சிக்கு 62 மைல் சுமார் 7 ரூபாய்செலவில் தறிக்காரன்போய் வாங்க முடியுமா? மாஸ்டர் வீவர் கார்டுகளை கார்டு எடுத்து போய் நூல்களை வாங்கிவந்துகுறைந்த கூலிக்கு நெய்யும்படி செய்வதும் ஏன்?

கூட்டுறவு சொசைடியிலோ சேர்ப்பதென்றால் அவர்களும் அவஸ்தைப் படுகிறார்கள் ஏனோ பாவம். எல்லா கூட்டுறவு ஸ்தாபனங்களும் அதிகாரம் டைரக்டர்கள் கையிலிருப்பதாலும் தங்கள் தங்களுக்கு வேண்டிய அடங்கி நடப்பவர்களைத்தவிர மற்றவர்களை சேர்த்தால் பின்னர் தன்பதவிக்கு ஆபத்து வராமல் காக்க அவர்களே சேர்ப்பதில்லை. சர்க்காரோ கூட்டுறவு ஸ்தாபனங்களில் சேரச்சொல்லுகிறது, அதிகாரமோ மகாசபைக்கு கிடையாது. என்ன செய்வார்கள் ஏழை கைத்தறி நெசவாளர்கள்.

மற்றொரு உதாரணம்.

மோட்டார் பஸ் போக்குவரத்து இந்த மாகாணத்திற்கே 161 முதலாளிகளுக்குள் பஸ் போக்கு வரத்து அடங்கிவிட்டது. ஜனங்களோ பிரயாணம் செய்ய பஸ்ஸைக்கண்டவுடன் படையெடுப்பதுபோல் போய் ஆண்கள் பெண்கள் என்ற நிலைமாறி, சில இடங்களில்

தொடர்ச்சி 8-ம் பக்கம்

★ கண்கவர் வனப்புடைய கைத்தறி ஆடைகள்..!! ★

நேர்த்தியான ரகங்கள்! ★ விலை நயம்! ★ 80, 100 நெ. கலர்கள் &
நீடித்த உழைப்பு!! ★ என்ன? ★ அசல் வெள்ளி சரிகை
நவ நாகரீகத்திற் கேற்ப ★ எங்கே? ★ உத்திரவாத முடைய ★
அழகிய பார்டர்கள்! ★ ★ சேலைகள் வேட்டிகள்.

ஜெயங்கொண்டசோழபுரம்
★ கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கத்தில் கிடைக்கும்.! ★

கூட்டுறவை ஆதரித்து தொழில் நலம் பெருக்குங்கள்.!!

— ...ம் தொடர்ச்சி —

...ாபாரதம்

வில்லிதரும் விளக்கம்.

ஆதிபருவம்] [குருகுலச்சருக்கம்

U. S. இராமசாமி பிள்ளை.

—:—

முன்பு விநாயக வணக்கமாகக்கூறிய செய்யுட்களைப் பற்றி ஆராய்ந்தோம். இப்போது நூலின் முதலில் கதைத் தொடர்ச்சித் தொடக்கத்தைப் பற்றி சிறிது ஆராய்வோம். முதற்செய்யுள்:

" எங்கள் மாதவன் இதய மாமலர் வரும் உதயத்
திங்கள் மாமரபினிற் பிறந்திசையுடன் சிறந்தோர்
அங்கண் மாநிலத் தரசர் பல்கோடி அவ்வரசர்
தங்கள் மாக்கதை யானறி அளவையில் சமைக்கேன் "

என்பதாம்.

இதில்பாரத கதையின் கதாநாயகரின் குலமான சந்திரகுலத்திற்கு முதல்வனைசந்திரனது பிறப்பிடங்களில் ஒன்றைக்கூறி, அச்சந்திர குலத்திலுதித்த அரசர்கள் கணக்கற்றவர்கள் என்றும், அவர்களின் கதைகளைத் தெரிந்தவரையில் கூறுகிறேன் என்றும் அவையடக்கம் கூறுகிருர்.

இ—ள்: எங்கள்-எங்களுடைய, மாதவன்-இலக்குமிகணவனை திருமாலின், மா-சிறந்த, மலர்-தாமரை மலர்போன்ற. இதயம்-மார்பில், வரும்-பிறந்த. உதயம்-ஒளியையுடைய, திங்கள்-சந்திரனது. மா - மேன்மை தங்கிய, மரபினில்-குலத்தில், பிறந்து-உதித்து, இசையுடன்-கீர்த்தியுடன், சிறந்தோர்-விளங்கியவர்கள், அம்-அழகிய, கண்-இடமகன்ற, மா-பெரிய, நிலத்து-பூமியில் அரசர் - மன்னர்கள், புல்கோடி - அநேககோடியாகும், அவ்வரசர் தங்கள் - அம்மன்னர்களுடைய, மா-பெருமை வாய்ந்த, கதை - சரிதத்தை, யான்அறிஅளவையில்— எனக்குத் தெரிந்த மட்டில், சமைக்கேன் - கூறுவேன். எ—று.

இ—பு. எங்களுடைய இலக்குமி கணவனை திருமாலின் சிறந்த தாமரை மலர் போன்ற மார்பில் பிறந்த ஒளியையுடையசந்திரனது மேன்மைபொருந்தியகுலத்தில் உதித்துக் கீர்த்தியுடன் விளங்கியவர்கள் அழகிய இடமகன்ற பெரிய பூமியில் மன்னர்கள் அநேககோடியாகும். அம்மன்னர்களுடைய பெருமைவாய்ந்த சரித்திரத்தை எனக்குத் தெரிந்தமட்டில் கூறுவேன். என்பதாம்,

குறிப்பு;— இங்கு வில்லி வைணவராதலால் "எங்கள் மாதவன்" எனக்குறிப்பிட்டார். அவர் சைவராக இருந்திருந்தால் எங்ஙனம் குறிப்பிடுவாரோ அறிகிலம்; சந்திரன் திருமாலின் மார்பில் பிறந்தான் எனக்கூறுகிருர் இக்கூற்றைப் பின்னர் வரும் செய்யுட்களைக் கொண்டு ஆராய்வோம். —தொடரும்.

உங்கள் வியாபாரம் செழிக்க —
— பொய்யாமொழியில்
— விளம்பரம் செய்யுங்கள்!

— தம்பிக்கு அண்ணு — 3ம் பக்கதொடர்ச்சி

மொழிகளுக்கு அடங்காமல் இருத்தல், ஆர் இருள் உய்த்துவிடும்-நிறைந்த அறிவின்மையினிடம் செலுத்தி விடும்

அம்பி! மேலும் நீ யாரிடமாவது பேசும்போது மிக அடக்கமாகப் பேச வேண்டும். பெரியவர்களிடம் அடக்கமாகவும், நண்பர்களிடம் அன்பாகவும் பேசிப் பழகவேண்டும். சமயம் அறிந்து பேசவேண்டும். இல்லாவிட்டால் உன்னை அவர்கள் மதிக்க மாட்டார்கள். உனக்கும் பலவிதந் துன்பங்கள் நேரும்.

அந்தமாதிரி அடங்காத பையன் ஒருவன் இருந்தான் அவன் கதையைத்தான் சொல்லப்போகிறேன், கேள்.

ஓர்ஊரில் தமிழ்மணி என்று ஒருசிறுவன் இருந்தான் அவன் அவனுடைய அம்மாவுக்கும், அப்பாவுக்கும் அடங்கி நடக்கமாட்டான். பெற்றோர்கள் சொல்லுகிறபடி நடக்க மாட்டான். எப்போதும் பிடிவாதமாகப் பேசுவான், அதனாலே அவனுடைய நண்பர்கள்கூட அவனை வெறுப்பார்கள்.

அவன் ஒருநாள் தனக்குஒரு விளையாட்டுத்துப்பாக்கி வேண்டுமென்று அவனுடைய அப்பாவிடம் அழுதான் அவனுடைய அப்பாவும் ஒருநாள் அதை வாங்கிக் கொடுத்தார். தமிழ்மணி அந்தப் பொம்மைத் துப்பாக்கியை வைத்துக் கொண்டு விளையாடினான். அதை எப்போதும் தனது கையிலேயே வைத்திருந்தான். தூங்கும்போது கூட அதைப் பக்கத்திலேயே வைத்துக் கொண்டு தூங்குவான்.

ஒருநாள் நல்ல மழை. இரவு முழுவதும் மழைப் பெய்து கொண்டிருந்தது. நல்ல இருட்டு. அன்றைக்கு ஒருதிருடன் தமிழ்மணி வீட்டில் நுழைந்தான் தமிழ்மணி அவன் அப்பா, அம்மா எல்லோரும் நன்ருகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். திருடன் மெல்ல நடந்துபோய் நகைப் பெட்டியைத் திறந்தான். பாவம், அவன் நான்கு ஐந்து நாட்களாகப் பட்டினி. அதனாலே அவன் நகைகளை திருடியாவது அவைகளை விற்று சாப்பிடலாம் என்று திருட ஆரம்பித்துவிட்டான். அம்பி. திருடன் பெட்டியை திறந்த சத்தம் கேட்டு தமிழ்மணியின் அப்பா விழித்துக் கொண்டார். அவர் விழித்துக்கொண்டதைத் திருடனும் பார்த்துவிட்டான். உடனே திருடன் தன் இடுப்பில் சொருகிவைத்திருந்த கத்தியைக் காட்டி அவரைப் பயமுறுத்தினான். அவருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. உடனே தமிழ்மணியின் பக்கத்திலிருந்த பொம்மைத் துப்பாக்கியை எடுத்து நீட்டி, " ஏய், பேசாமல் வெளியே போய்விடு. இல்லாவிட்டால் இந்தக் கைத்துப்பாக்கியால் சுட்டுவிடுவேன் " என்று திருடனைப் பயமுறுத்தினர். அந்த சமயத்தில் தமிழ்மணி விழித்துக் கொண்டிருந்தான். பொம்மைத் துப்பாக்கியால் சுட முடியுமா, அம்பி? தமிழ்மணியின் அப்பா அந்தத் துப்பாக்கியால் திருடனைச் சுட்டுவிடுவேன் என்று சொன்னபோது அவன், " அப்பா அதுதான் பொம்மைத்துப்பாக்கியாச்சே. அதாலே சுட்டுப்புடுவேன் என்கிறியே " என்று சொல்லிவிட்டுச் சிரித்தான். இதைக் கேட்டத் திருடன் அந்தத் துப்பாக்கியால் தன்னைச் சுடமுடியாது என்று சந்தோஷப்பட்டு நகைப் பெட்டியில் இருந்த நகைகளை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டான்

தொடர்ச்சி அடுத்தபக்கம்

[stamp] OCT 1960

அம்பி, பார்த்தியா. தமிழ்மணி அந்தமாதிரி சொல்லாமல் இருந்தால் திருடன் பயந்து, வீட்டை விட்டு வெளியே ஓடியிருப்பான். அதனாலே சமயமறிந்து பேச வேண்டும் தம்பி. அதைத்தான் திருவள்ளுவர் சொல்லுகிறார், கேள். 'யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால் சோகாப்பர் சொல் இழுக்குப்பட்டு' யாகாவாராயினும்-எவைகளைக் காக்காத போதிலும், நா காக்க-நாக்கைக் காக்கவேண்டும், காவாக்கால் - அந்தமாதிரி காக்காவிட்டால், சோகாப்பர் - துன்பப்படுவர்.

அதனாலே அம்பி, நீ அடக்காக நடந்தும், அடக்கமாக சிந்தித்துப் பேசியும் பழகவேண்டும், இன்றைக்கு இரண்டு குறட் பாட்டுகளை உனக்குச் சொல்லியிருக்கிறேன். அவைகளை நீ நாளைக்குக் கேட்கும்போது ஒப்பிக்கவேண்டும், தெரியுதா. சரி, நாழி ஆகிவிட்டது நீ போய்த் தூங்கு.

— தலையங்கம் — ...

கை நுழையும் ஒரு சிறு துவாரத்தில் 9 ... வழிப்பறிகிறது. இதிலோ மொத்த... 3 இடத்துக்கு 30 பேர்களுக்கு குறையாது. ஒவ்வொரு வண்டிக்கும். இந்நிலைமையில் அதிகவண்டிவிட புதிதாக பஸ்பர்மிட் கொடுத்துவிட்டாலோ ஏற்கனவே அந்த ரோட்டில் பஸ் ஓட்டிவருகிற முதலாளி உடனே ஏதோ காரணம் சொல்லி ஸ்டே வாங்கி விடுகிறார். 30 பிரயாணிகள் குவிந்த கூட்டம் 60 ஆகி தடுமாறுகிறது ஏன் ஒரு சிலருக்கு சலுகையளித்து பஸ்கள் ரோட்டு கேட்பவர்களுக்கு பர்மிட் வழங்ககூடாது. தேசியமாக்குவது தான் பகல் கனவாய் விட்டதே. அதிகமான பஸ்கள் போக்குவரத்தில் விட்டு பொது ஜனங்களுக்கு சவுகரியம் செய்வதால் சர்க்காருக்கு லாபமேயொழிய நஷ்டமில்லை ஏன் செய்யவில்லை.

★

ஜில்லாவாரியாக மோட்டார் கம்பெனிகள் விபரம்.

(1948-ம் ஆண்டு அறிக்கைபடி.)

ஜில்லா	மொத்த கம்பெனிகள்	இணைந்த கம்பெனிகள்	மொத்த பஸ்கள்
1 சென்னை	5	4	214
2 விசாகப்பட்டினம்	5	1	38
3 கிழக்கு கோதாவரி	7	6	138
4 மேற்கு கோதாவரி	6	6	158
5 கிருஷ்ணா	8	7	182
6 குண்டூர்	10	5	108
7 அனந்தப்பூர்	3	1	33
8 பெல்லாரி	2	1	13
9 கடப்பை	3	2	57
10 கர்னூல்	4	4	93
11 சித்தூர்	6	3	49
12 வட ஆற்காடு	11	5	126
13 தென் ஆற்காடு	5	1	32
14 தஞ்சாவூர்	7	3	108
15 திருச்சிராப்பள்ளி	8	5	95
16 மதுரை	6	5	405
17 ராமனதபுரம்	10	4	43
18 திருநெல்வேலி	8	4	130
19 கோயம்புத்தூர்	7	5	240
20 நீலகிரி	3	3	49
21 சேலம்	9	2	68
22 மலபார்	12	7	151
23 தென் கன்னடம்	6	5	131
24 நெல்லூர்	4	2	80
25 செங்கற்பட்டு	7	—	—
	161	91	2751

அடுத்த இதழில்...!

— கன்னியப்பன் [தொடர்]

— திருவும், அறிவும்

— மற்றும் சமூக, தொழில்,

— சம்பந்தமான கட்டுரைகள்

வெளிவருகிறது!

கம்பெனிவாரியாக தொழிலாளர்களின் எண்ணிக்கை.

(1948-ஆண்டு அறிக்கைபடி)

தொழிலாளி விபரம்	ஸ்ரீ ராமவிலாஸ் சர்விஸ்.		
	மதுரை	கும்ப கோணம்	புதுக் கோட்டை
Apprentices.	—	—	—
Driver	166	90	20
Conductor	146	80	21
Inspector	61	14	—
Time Keeper	84	6	7
Booking Clerk	—	—	—
Foreman	5	4	—
Mechanic	5	6	2
Asst. Mechanic	13	11	2
Fitter	15	19	1
Asst. Fitter	57	49	7
Cleaner	135	88	17
Welder	2	3	1
Blacksmith	14	9	9
Corpenter	11	11	1
Electricians	6	10	—
Supervisor.	—	—	—
Charcoal Grademan	25	9	6
Liner	—	2	—
Tailor	2	—	—
Tinker	18	16	1
Painter	8	6	1
Tyreman	5	5	2
Vulcunizer	1	—	—
Turner	2	8	—
Moulder	2	1	—
Hammerman	—	11	—
Batteryman	—	—	—
Greaser	2	2	2
Coolie	19	1	—
Watchman	18	—	3
Accountant	—	—	—
Clerk	—	—	—
Peon	—	—	—
Cashier	—	—	—
Manager	—	1	—
Sweeper	2	1	—

(தொடரும்)

Printed by A. P. Ramaswami Pillai at the Sri Rathna Press, (Branch) Jayankondacholapuram.
Edited and Published by M. Bhaskaranar, 17, Ketcheri Street, Jayankondacholapuram.